**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

Case No.CC.35/2023
Prosecution witness.02

| | |
|---|---|
| பெயர் : மலைச்சாமி | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 06th day of November 2023.

06.11.2023

(எதிரிகள் 1 மற்றும் 2 ஆஜர், 3ம் எதிரி ஆஜர் இல்லை. 3ம் எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

1) நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் கூலிவேலை செய்கிறேன். அசா.1 ஜெயராணி எனது மகள் ஆவார். கடந்த 26.04.2022ம் தேதி மதியம் 03.00 மணியளவில் எனது மகள் கட்டிக்கொண்டு இருக்கும் வீட்டிற்கு செல்வதற்கு பாதையை 1ம் எதிரி சக்திவேலிடம் அசா.1 கேட்டார். அதற்கு கொடுக்க முடியாது என்று பிரச்சனை வந்தது. உடனே, எனது மகள் கட்டியிருந்த கோழிக்கூண்டை உடைத்தும், எனது வீட்டின் ஓட்டையும் 1ம் எதிரி சக்திவேல், 2ம் எதிரி மதி, 3ம் எதிரி கணேசன் ஆகியோர் உடைத்தார்கள்.

2) 1ம் எதிரி சக்திவேல் எனது மகள் அசா.1 ஜெயராணியை நெற்றியிலும், இடுப்பிலும் அடித்தார். எனது மகள் அசா.1 மயங்கிவிழுந்தார். அப்போது தற்செயலாக எங்கள் ஊருக்கு வந்திருந்த சவாரிஆட்டோவில் எனது மகளை ஏற்றிக்கொண்டு முதுகுளத்தூர் காவல்நிலையம் சென்று புகார் அளித்துவிட்டு முதுகுளத்தூர் அரசு மருத்துவமனைக்கு சேர்த்தேன். அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>1 முதல் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் குறுக்கு விசாரணை இல்லை என்றதன்பேரில் குறுக்குவிசாரணை முடிக்கப்பட்டது.